Vol. XXI] May, 1921 [No. 2

Society for the . . .
Prevention of Cruelty .
to Animals, Madras .

ENGLISH & TAMIL.

# TIT-BITS OF ANIMAL LIFE

ஜந்து வர்த்தமான ஸாரம்.

*Copies can be had on application to the Honorary Secretary, S.P.C.A., Vepery, Madras.*

**Annual Subscription, Half a Rupee, payable in advance.**



EDITED BY

K. CHENGALVARAYA AYYAR, B.A., B.L.,

*Member of the S.P.C.A.*

சென்னை: ஜீ. ஹி. ஸி. சங்கத்தின் மெம்பராகிய

கே. செங்கல்வறய அய்யர், பி.ஏ., பி.ல். அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

S. P. C. K. PRESS, VEPERY, MADRAS PUBLISHED QUARTERLY.

**A QUARTERLY JOURNAL—Vol. XXI.—Number 2.**

---

**May, 1921-௵ மே௴**

CONTENTS


IN ENGLISH

| | PAGE |
|---|---|
| Birds on a Rubber Estate ... ... | 11 |
| News and Notes ... ... ... | 12 |
| The S.P.C.A. ... ... ... | 13 |


அட்டவணை


தமிழில்

| | பக்கம் |
|---|---|
| ஒட்டகத்தின் விசாலமான முதுகிற்கூடாரம். | 13 |
| கோ ரக்ஷண போதினி .... | ....14-18 |
| சில சாதாரண இந்திய பக்ஷிகள்.... .... | 18 |
| பாம்பையும் தின்றூர்களாம் .... .... | ,, |
| வர்த்தமானக் குறிப்புகள் .... .... | 19 |



# TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

## ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் XXI.] MAY, 1921-௵ மே௴. [இலக்கம் 2.


## BIRDS ON A RUBBER ESTATE.

### Night Disturbing Koel.

NO, I CANNOT PRETEND THAT I ENJOY the koels dulcet midnight serenade. I leave that to my Indian friends. Anyone who can find melody and delight in that sleep-averting monotony of sound has my admiration, but I do not understand his taste.

As I lie awake and share the emotions of the parboiled prawn and listen to the ghastly noises of the night, I am consoled by the reflection that the nocturnal disturber of my dreams is probably the only created being who scores off that noontide pest, the crow. For it is the tuneful koel (Eudynamis honorata) who plays the typically cuculine part of ousting young crows from their nests and in their occasional destruction and the consequent lessening of their numbers lies our salvation from the brain fever of which the Koel is never tired of reminding us. The above long-winded paragraph has given you, gentle reader (if any reader is gentle at the commencement of the hot weather, with eye-flies gleefully exploring his or her face!) has given you, I say, a general idea of the avifauna of the average South Indian Rubber Estate, to wit, the crow in two diurnal spasms known, respectively, as Corvus macrorhynchus or he of the big beak and Carvus splendens, the splendidly insolent, and the nocturnal koel. This cuckoo—it is a treat to be able to call some birds names, in English, while adhering strictly to ornithological exactitude, of course, most birds seem to be sworn at when referred to in scientific Latin—this cuckoo then, is not really entirely a night bird, but in the daytime its voice is drowned to a great extent by the cawing of the crows, and so it is at night that we mainly note its presence.

### Other Cuckoos.

There are, however, many less ubiquitous and far less noisy birds to be found in and around a rubber estate. Since we have been engrossed in the vocal delinquencies of the cuckoos, let us observe two others of the tribe which, however, build nests and do not drop their oological efforts promiscuously about. The first of these is the crow pheasant whose deep throated 'who-who-who' must be familiar to all, more so perhaps than his crimson eyed, chestnut-winged, black body. The coucal (centropus sinensis), as he is more suitably named, seeing that he is neither a crow nor a pheasant, spends his time skulking about in thickets and scrub jungle. His actions somehow remaind me of a winged cat! The other cuckoo is the green billed malkoha (Rhopedytes viridirestris). I have never greatly liked the malkoha; his head is too naked looking, obscene, and altogether vulturine to fit in with my ideas as to what a bird should look like! This is a heavy loose-knit skulker of a nondescript dark colour with a bare looking head adorned with a green bill and naked green skin round the eye.

### Merops Viridis and others.

Far different is the delicate little bee-eater (Merops viridis), who, perched on the lower branches of a rubber tree, makes short sallies after his winged prey and returns to his perch to discuss his capture. As soon as one unfortunate insect is swallowed, he is off after another. A gentle green bird, his plumage shot with gold, with a long curved black beak and the two centre feathers of his tail

considerably longer than the rest, he sits perched on a twig from which he commands a wide hunting ground. Among the bamboos on the boundary will be found the Indian tree pie (Dendrocitta rufa) arrayed in chestnut and grey and in no way resembling the traditional magpie. Kites, of course, are always sailing about overhead. The pariah kite (Milvus govinda), at once distinguishable from all other birds of prey by his conspicuously forked tail, and the handsome brahminy kite with his white head and breast in striking contrast to the rich chestnut of the rest of his plumage. The young brahminies are often mistaken for pariah kites owing to their superficial resemblance to each other, but the brahminy does not own a forked tail and so can easily be distinguished from his plebean relative.

### 'The Seven Sisters.'

Wherever scrub jungle borders the estate, there will be found the noisy restless seven sisters; our local branch of the family goes by the name of the white headed babbler (Crateropus griseus): there also will the robin be seen, (thamnobia fulicata ornithologists call him), his glossy black plumage with a white patch on either wing and a red patch under his tail, must be familiar to all.

The commonest parrot in the rubber districts is probably the Western blossom headed parroquet (Palacornis cyanocephalus.) This is a long way the most beautiful of the Indian green parrots. His general colour is green, of course, but he has a lovely head with a bloom on it like unto that of a ripe plum. The screams of this species are for less piercing than those of most green parrots, but they have all the habits of their tribe and they eat perhaps one-tenths of what they taste. The strikingly coloured blue jay, which is not a jay, but the Indian roller (Coracias Indica), is common wherever plume collectors have not relentlessly persecuted it. It is curious that the European roller (Coracias garrula) should be more brilliantly coloured than its tropical relative. The blue roller, as it is called, would probably become a naturalised Britisher were it only permitted to do so instead of being shot at sight, as alas! generally happens when this fine bird visits the shores of Britain.

### Bird Wealth on Estates.

But to return to the 'Thotum.' A complete list of the birds to be found there would include some eighty species, but among the commonest of these, besides the birds already mentioned, will be found the green barbet (Thereiceryx zeylonicus) and the coppersmith (Xanthalaemia Haematacphala). Both these birds thoroughly deserve the opprobrious epithets science has saddled them with. Their monotonous notes are only one degree less irritating than the call of the koel. The king crow (Dicrurus ater) is a cheerful ruffian who bullies all birds that dare to grow larger than himself. He particularly objects to crows and kites. The black-headed oriole (Oriolus mealanacepafilus) is a beautiful rich yellow bird with a black head and black streaks in his wings. The French name for the genus 'Loriet' comes within measureable distance of the sound of his song. The butcher birds every-body knows. And who does not know the paddy-bird (ardeabla grayi)?

## NEWS AND NOTES.

### Monkeys in Nellore (from a Correspondent).

We have in Nellore about a 1,000 and odd monkeys, but we are anxious to get rid of this company. Some of them have turned agressive and have attacked and mauled many persons. Such cases are being treated at the local hospital. Others have made free with the tiles of the house roofs so that it has been found necessary in any important ward to plaster the whole exterior of the roofs with chunam. They are causing other similar loss. The people are still reluctant to have them all shot but are willing to pay a good reward to any 'Pied Piper', who will rid them of this pest. The Municipality has failed to do anything in the matter. Will any of your readers recommend professional catchers or others who will remove them to some neighbouring forest. I am sure the town will pay them a decent reward and be grateful.

197916
Madras-600 005.



## THE S. P. C. A.

### At Salem.

(FROM A CORRESPONDENT.)

On Tuesday a meeting was held in the Town Hall presided over by Mr. P. Macqueen, I.C.S., the Collector to inaugurate the S.P.C. A. in Salem. There is no doubt a great need for such a Society as cruelty is rife not only in the Town but in the District. Mr. Macqueen was elected President, and Mr. Loganatha Mudaliar, Vice-President, the Rev. W. J. Hatch had at a former meeting been appointed Hon. Secretary. The following were elected as Executive Committee:—Messrs. C. Vijiaragavachariar, R. S. Ramasami Naicker, M. D. Subborayar, C. S. Baskar, S. K. I. Abdul Rahim Sahib, Jamnadas Maduramdoss Sait, K. Sivasankara Mudaliar, and W. H. Pitt (D.S.P.), with Mr. E. Shaw of the Bank of Madras, as Hon. Treasurer.

An Inspector will be appointed without delay and it is intended that he shall proceed to Coimbatore for a short period of training and that on his return he shall be appointed to Salem Town where he will arrest and prosecute serious cases of cruelty and warn other cases of a less cruel nature and generally look after the welfare of animals in the town. It was decided to adopt as far as possible the rules of the Madras Society.

## ஒட்டகத்தின் விசாலமான முதுகிற் கூடாரம்.

பாலைவனக் கப்பலாகிய ஒட்டகத்தின் சரித்திரம் எவருமறிந்ததே. வனாந்தரத்தைக் கடக்க உபயோகமா யிருப்பதுபற்றியே இது வனாந்தரக் கப்பல் என்று பெயர்பெற்றதும். இம்மிருகங்கள் அரேபியாப் பாலைவனங்களி லும், ஸஹாராப் பாலைவனங்களிலும் பெரிதும் உபயோகமாகிவருகிறது. அரேபியாவில் ஸ்திரீ புருஷர்கள் இந்த மிருகத்தினை வீட்டு மிருகமாக வளர்த்து ஓரிடமிருந்து மற்றோரிடம்போக வாகனமாக உபயோகிக்கிறார்கள். அரேபியா ஸ்திரீகள் இந்த ஒட்டகத்தின் பின்புறத்தில் கூடாரம் அடித்து, அதில் சௌக்கியமாய் வசித்துப் பிரயாணம் செய்வது இப்போதும் வழக்கமாயிருக்கிறது. ஒட்டகத்தின் விசாலமான திமில் புறத்தில் இந்தக் கூடாரமடிக்கப்பட்டு அத்திமிலிலேயே மெத்தென்ற ஆசனங்கள் அமைக்கப்பட்டு ஸ்திரீகள் சூரிய உஷ்ணமும், பனியும் மழையும் தாக்காமல் போகும் தன்மை மிகுதியும் நன்றாயிருக்கிறது. ஸ்திரீகள் இம்மாதிரி பிரயாணம் செய்யும்போது ஒட்டையின் பக்கத்தில் மனிதர்கள் ஜாகரூகர்களாய்ச் சென்றுகொண்டிருப்பார்கள்.

இதனால் அரேபிய ஸ்திரீகள் மனிதர்களைக் காட்டிலும் பதவியில் உயர்ந்திருக்கிறார்கள் என்று சொல்லவேண்டி யிருக்கிறதே தவிர, அவர்களை அந்நாட்டவர்கள் மிகவும் மரியாதையின்றி நடத்துகிறார்கள் என்று சொல்வதற்கு இடமில்லாம லிருக்கிறது. அரேபிய ஸ்திரீகள் சமயம் நேர்ந்தவிடத்தும் மற்றும் காரியங்களிலும் சுறு சுறுப்பாயிருந்து பிரபல வியாபாரங்களையும் நடத்திப் பெயர் பெற்றிருக்கிறார்கள். அரேபிய ஸ்திரீகள் யுத்த காலங்களில் அவசியம் ஏற்பட்டபோது சேனாசமூகங்களை நடத்தியும் பிரசித்தி பெற்றிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

கூடாரம்போட்ட முதுகுடன் கூடிய படமொன்று 1921-ஆம் வருஷத்து ஜனவரி மாசத்து மாடர்ன் ரிவியூவின் 48-வது பக்கத்தில் பதிக்கப்பட்டிருப்பதை பத்திரிகை வாசிக்கும் வழக்கமுள்ளவர்கள் பார்ப்பார்கள். அப்படத்தில் ஸ்திரீகள் கூடாரமடித்த ஒட்டையின் மேலிருக்கும் நிலையும் பிறவும் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

வனாந்தரப் பிராந்தியங்களில் வசித்துலவும் ஒட்டகம் மெல்லிய கால்கள் உடையன. அப்படி யிருப்பதனாலேயே அவை உஷ்ணமிகுந்த பாலைவனத்தில் தினமொன்றுக்கு உஷ்ணத்தைச் சிறிதும் இலக்ஷியம் செய்யாது 25 மைல் நடக்கக்கூடியதாயிருக்கும். ஒட்டகத்தின் பாதங்களமைந்திருக்கும் தன்மை, பாலைவனத்தின் உஷ்ணத்தை இலக்ஷியம் செய்வதாயில்லை.

வனாந்தரங்களில் வளர்ந்துள்ள முட்கள் மிகுதியும் பொருந்திய ஜலப்பசையுடன் கூடிய செடிகளை உண்டு நெடுநாள் ஜலம் குடியாமலே வெகுதூரம் பிரயாணம் செய்யக் கூடியதாயிருக்கிறது. ஒட்டகங்களில் மிகுதியும் சிறந்த ஜாதிகள் நாளொன்றுக்கு அன்று

காரமில்லாமல் ஐம்பது மைல்கள் வீதம் சேர்ந்தாற்போல் 5 நாட்கள் பிரயாணம் பண்ணும். இந்த வனாந்தரக் கப்பலே யில்லாதுபோனால், வனாந்தர வாசம் மிகுதியும் சங்கடம் விளைக்கு மென்பதில் ஐயமில்லை.

## கோ ரக்ஷண போதினி

(All rights reserved).

ஐந்து வர்த்தமான ஸாரம் (8 ஆம் பக்கத் தொடர்ச்சி.)

### 56. உள்பேரிவை நோய்.

**நோயின் தன்மை:**—உள்பேரிவை நோய் மாட்டின் உடலிலேயே உண்டாகும். அந்நோய் பீடித்த மாட்டின் மூக்கில் வியர்வையுண்டாவது, இந்நோயுண்டானதற்கு அறிகுறியாகும். வயிறு வீங்கும், நல்ல மேய்ச்சல் மேயாது.

**ஔஷதம்:**—அமுரி யிலைச்சாறு கால்படி எடுத்துக் கொண்டுவந்து காடியிற் கலந்து சமனெடையாக உள்ளுக்கு மாட்டுக்குக் கொடுக்கவும்.

**சூடுபோடுதல்:** — இந்த மருந்தில் குணமுண்டாகாதுபோனால், மூக்கை முகத்தில் பிளந்ததுபோல் + இக்குறியிட்ட சூடுபோடவும். கபாலத்தில் உண்டான இந்நோய் இந்த சூடுபோட்டவுடன் நன்றாய்த் தீரலாம் என்பது வைத்திய நிபுணர்கள் அநுபவத்திற் கண்டது.

### 57. போசுக்கை நோய்.

**நோயின் தன்மை:**—போசுக்கை நோய் கொண்டமாடுகளின் தேகம் பட படத்து நிற்கும். நின்ற நிலையில் நிற்காமல் திடீரென்று மாடு கீழே விழும். வயிறும் உப்பும்.

**ஔஷதம்:**—பெருங்காயம் ஒரு பலம் வாங்கிவந்து, 10 வெற்றிலையில் சேர்த்து மடித்து, மாட்டின் உள்ளுக்குக் கொடுக்க மாட்டின் நோய்தீரும்.

### 58. மழைக்குன்றி.

**நோயின் தன்மை:**—மழைக்குன்றி என்ற நோய் மழை பெய்யும் காலத்திற்கு 60 நாழிகைகளுக்கு முந்தி மாடுகளுக்குக் காணும். அதனாலேயே மழைக்குன்றி என்றபெயர் பெற்றது. அந்த நோய் மாட்டுக்குப் பீடித்தது கொண்டு, மழை 60 நாழிகைக்குள் வரக்கூடுமென்று ஒருவாறாக ஜோஸியமும் சொல்லிவிடலாம்.

இந்நோய்கொண்ட மாட்டின் தேகம் படபடத்துத் திடீரென்று கீழேவிழும். கால்கள் உதைத்துக்கொள்ளும். புரண்டு புரண்டு விழும்.

**ஔஷதம்:** — குன்றிமணிக் கொடியை இலையுடன் கொண்டுவந்து, அக்கொடியை மூன்றுதரம் மாட்டின் கழுத்தில் படியச் சுற்றிவைக்க அந்நோய்தீரும். கறுப்பு சிவப்பு வெள்ளை வர்ணங்களில் எந்தமாதிரிக் கொடியைக் கொணர்ந்தும் அவ்வாறு கட்டிவைத்து நோய் நீங்கப் பெறலாம்.

### 59. கலதாமரை நோய்.

**நோயின் தன்மை:**—கலதாமரை மாடுகளைப் பீடிக்கும் நோய் வகைகளில் ஒன்று. இதனைக் கல் பொறாமை என்றும் சொல்லுவார்கள். இந்த நோய் கொண்டமாடுகள் வைக்கோல் தீனி, நன்றாகத் தின்றுகொண்டேயிருக்கும். தண்ணீரும் நன்றாகக்குடிக்கும். இப்படியிருக்கையில் மாட்டுக்கு வலியெடுப்பதுபோல வலித்திழுக்கும். மாட்டை எத்தனைபேர் தாங்கிப் பிடித்தாலும் பொறாமல் திடீரென்று பூமியில் விழுந்துவிடும். இரண்டு நாழிகைக்கொருதரம் இம்மாதிரி நோய்காணும். ஆனால் இதுகண்ட நாலு நாழிகை கழித்து எப்போதும்போல புல் தண்ணீருணவுகள் தாராளமாய் அருந்திக்கொண்டிருக்கும்.

**ஔஷதம்:** — வெள்ளைப்பூண்டு பலம் ஒன்று மிளகு பலம் ஒன்று சுக்கு பலம் அரை, வெற்றிலை 25 இவைகளை வாங்கிவந்து, எல்லாவற்றையும் சேர்த்து அம்மியில் வைத்தரைத்து, தக்க அளவு காடியெடுத்து, அதில் மேற்படி மருந்தை நன்றாய்க் கலக்கி மூன்று பாகம்பண்ணி, மூன்றுவேளை இந்த மருந்தை மாட்டுக்கு உள்ளுக்குக்கொடுக்க, மாடு நோய் நீங்கிக் குணமடையும்.

**சூடுபோடுதல்:** — இம்மருந்தினால் மாடு குணமடையாதுபோனால், மறுபடியும் மேற்கூறிய ஔஷதத்தை மூன்றுவேளை உபயோகிக்கவும்; இதிலும் குணமாகாதுபோனால் மாட்டின் விலாப்புறத்தில் **யூ** இக்குறியிட்டுச் சூடுபோடக் குணமாகலாம்.



### 60. எள்ளைத் தின்ற மாட்டுக்கு.

**நோயின் தன்மை:**—மாடு நடமாடு மிடங்களில் பலவேளைகளில் குடியானவர்கள் ஆடி எண்ணெயெடுக்க வேண்டிய எள்ளைக் கொட்டிக் காயவைப்பதுண்டு. இன்னும் மாடு குறுக்கே நெடுக்கே போகும் தெருக்களிலும் வெயிற்புறத்தில் ஜனங்கள் எள்ளைக் கொட்டிக் காயவிடுவதுண்டு. இந்த அரும் பெரும் பொருள்கள் களவு போகாவண்ணமும், மாடுகள் புகுந்து மிதித்துப் பாழ்படுத்திக் கொள்ளை கொள்ளாவண்ணமும், எள் சொந்தக்காரர் தகுந்த காவலை நியமித்துவைத்தலுமுண்டு. இப்படிக் காவலில்லாதுபோனால் எள்ளுக்கு மேற்கூறிய ஆபத்துக்கள் நேரிட்டுவிடுதல் சகஜம். இப்படிக் காவலில்லாத எள்ளை மாடுதின்றதனால் எள் மாட்டின் வயிற்றில் அப்படியே ஒட்டிக்கொண்டு ஜீரணித்து கொள்ளமுடியாது தவிக்கும். எள்ளைத் தின்றதனால் மாட்டின் வயிறு உப்பிவிடும்; அந்த மாட்டுக்கு மூச்சுக்கூட விடமுடியாது.

**ஔஷதம்:**—எள்ளுச்செடியைக் கொண்டுவந்து அச்செடிகளைத் துண்டு துண்டாக நறுக்கிவைத்துக் கொள்ளவேண்டும். அடுப்பில் சட்டி யொன்றுவைத்து அத்துண்டுகளை அதிற்போட்டுக் கரியாகிறவரையில் வறுத்து எடுத்து, அதில் சுக்கு நசுக்கிப்போட்டு ஜலத்தைவிட்டு நன்றாகக் காய்ச்சி அந்தக்கஷாயத்தை மாட்டுக்கு உள்ளுக்குக்கொடுக்க மாடு நோயினின்று நீங்கிக் குணமடையும். இம்மருந்து கொடுத்தமாத்திரத்தில் மாட்டின் வயிற்றிலுள்ள எள் மலஜலமாய் வடிந்து வயிற்று உப்புதல் நீங்கிக் குணம் கொடுக்கும்.

### 61. நெல் தின்றமாட்டுக்கு வைத்தியம்.

**நோயின் குணம்:**—சென்ற அதிகாரத்தில் எள்ளுக்கு நேரும் விதமே, தெருக்களிலும் பொதுவிடங்களிலும் காய்ந்துகொண்டு கிடக்கும் நெல்லுக்கும் அல்லது சாக்குகளிலும் வெ[illegible]டங்களிலும் கேட்போரின்றிக் கிடக்கும் நெல்லுக்கும் மேற்கூறியகதி நேர்ந்துவிடுவதுண்டு. அதிகமான நெல்லை மாடுதின்றாலும், அது அந்நெல்லைச் சீரணித்துக்கொள்ள சக்தியில்லாது வயிறு உப்பிக் கீழ் வீழ்ந்து புரளும்.

**ஔஷதம்:**—நெல்லைச் சட்டியிற்போட்டுக் கருகவைத்து அதில் சுக்கை நசுக்கிப்போட்டு ஜலத்தை விட்டுக் காய்ச்சித் தாராளமாய் அந்தக் கஷாயத்தை மாட்டுக்குக்கொடுக்க, மாடு மலஜலங்களாக தின்ற நெல்லத்தனையும் கழியும். பின் வயிற்று உப்புதல் நீங்கிக் குணமுண்டாகும்.

### 62. கொழுக் காயம்பட்ட மாட்டிற்கு வைத்தியம்.

**நோயின் தன்மை:**—மாடுகள் ஏரில் பூட்டப்பட்டு உழும்பொழுது, தவறுதல்நேரிட்டு கொழுக்காயம்படுவது சகஜம். இக்காயம் இயல்பிலே கால்களிலேதான் படும். அக்காயத்தினால் மாடுகள் அவஸ்தைப்படுவதுண்டு.

**நசிய மருந்து:**—சிறிது உப்பையும் குப்பைமேனிப்பூண்டின் இலையையும் கசக்கிப் பிழிந்து வரும் ஜலத்தை அதாவது. நசியமருந்தை வலதுகால் காயமாயிருந்தால், மாட்டின் இடது காதிலும், இடதுகால் காயமாயிருந்தால் மாட்டின் வலது காதிலுமாக நசியம் செய்ய, காலில் பட்டகாயம் வீக்கங்கொள்ளாமலும் சீ கொள்ளாமலும் சௌக்கியத்திற்கு வருமென்பது அநுபவத்திற் கண்ட முறை.

### 63. நாக்கில் நாவுறிஞ்சி முளைத்த மாட்டிற்கு மருந்து.

**நோயின் தன்மை:**—கௌதாரி என்னும் பட்சிகளுக்குக் கூர்மையான முள்ளிருப்பது போல், மாடுகளின் வாய்களின் மேற்புறத்தில் நாக்கில் முட்களும், புள்ளியான குறிகளும் தோன்றும். மாட்டின் வயிற்றின் மூலத்தில் உஷ்ண மிகுதியினால் இந்த மாதிரியான முட்கள் உண்டாகின்றன. அப்போது நாக்கின் கீழ்ப்பாகங்களில் இரண்டு பசுமையான நரம்புகள் புடைத்திருக்கும். அப்போது மாடுகள் இரையெடாது, நல்ல மேய்ச்சல் மேயாது. மாட்டின் நாக்கைப் பிடித்துப் பார்த்தால் அதன் இலக்ஷணம் நன்கு தெரியவரும். அதற்கு நாயுறிஞ்சி வியாதி என்று பெயர் கொடுத் தழைக்கிறார்கள்.

**ஔஷதம்:**—உப்பையும் புளியையும் சேர்த்து, நாக்கில் முளைத்திருக்கும் முட்களின் மேல் தேய்க்கவேண்டும். புடைத்திருக்கும் இரண்டு பச்சை நரம்புகளை ஊசியினால் ஒரேவிடத்தில் குத்தி அந்த நரம்பை யறுத்துவிடவும். அப்போது பசுமையான இரத்தம் வடிய, சிலநாட்கள் பிறகு இந்த வியாதி நிவிர்த்தியாகும். இந்த வியாதி ஒருவாரம் வரையில் நீடித்திருக்கும்.

177916

### 64. நெடுமயிர் பாய்ந்து புல்லும் தண்ணீரும் வயிறுநிறையச் சாப்பிடாதமாட்டிற்கு வைத்தியம்.

**நோயின் தன்மை:**—சில மாடுகளுக்குத் திடீரென்று நெடுமயிர் பாயும். புல்லுந் தண்ணீரும் எப்போதும்போல் சாப்பிடாது. மாடு முன்னைவிட மெலிந்துபோகும். தள்ளாடித் தள்ளாடி நடக்கும். மாடுகளின் மயிரிலும் அழுக்குப் படிந்திருக்கும்.

**ஔஷதம்:**—பச்சைமஞ்சள், மிளகு, பிரண்டை, கல்லுப்பு, நாட்டுமீனின் தலை, இவைகளை வகைக்கு ஓரளவாக எடுத்துக்கொண்டு, எல்லாவற்றையும் சேர்த்து அரைத்துத் தேங்காயளவு பரிமாணம் உண்டைஉருட்டி, மேற்கூறிய நோய்ப்பட்ட மாட்டிற்குக் கொடுக்க, மாடு நோயினின்று நீங்கிக் குணமடையும்.

### 65. (1) அடைப்பான் வகைகளுக்குப் பொது ஔஷதம்.

**நோயின் தன்மை:**—அடைப்பான் வகைகளில் பலவற்றைப்பற்றி முன் அத்தியாயங்களிற் கூறியிருக்கிறோம். இவைகள் எட்டு வகைப்படுவன. இவைகளுக்குப் பொதுவான கைம்முறை ஔஷதம் அநுபவத்திற் கண்டது பின்வருமாறு.

**ஔஷதம்:**—சுக்கு, அரிசித்திப்பிலி, மிளகு, சிற்றரத்தை, கண்டத்திப்பிலி, வாயுவிலிங்கம், நல்ல சாதாரண நொச்சிக்கொழுந்து, எருக்கன் வேர், மாவிலிங்கன் பட்டை, கொடிவேலி வேர், சிறுகுறிஞ்சாப் பெருமருந்து இவைகளை அளவாக வாங்கி வைத்துக்கொள்ளவேண்டியது. மேற்படி கடைச்சரக்குகளெல்லாவற்றையும் வகைக்கு ஒரு பலம் எடுத்துப் பட்டை வகையராக்களையும் வேர் வகையராக்களையும் அரைப்பல வீதம் எடுத்துத் தனித்தனி நசுக்கியும் இடித்தும் பொடித்தும் ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு, அவற்றை நான்கு டிராம் (Drams) சாராயத்திற் கலந்து மாட்டுக்கு உள்ளுக்குக் கொடுக்க மாட்டின் நோய் உடனே தீரும். மருந்துபோட்ட மறுவேளை தண்ணீர் காட்டலாம்.

### 66. (2) அடைப்பான்களுக்கு மற்றொரு பொது மருந்து.

**ஔஷதம்:**—மிளகு படி காலே அரைக்கால் கொண்டுவந்து நன்றாகப் பொடிசெய்து வைத்துக்கொண்டு, அதை அரைப்படி நெய்யிலிட்டுக் கலக்கி அடைப்பான் கண்ட மாடுகளுக்கு உள்ளுக்குக் கொடுக்க எட்டுவித அடைப்பான்களும் நிவர்த்தியாகும்; மாட்டு வயிறு உப்பல் நோய்களுக்கும், சிலந்தியிற் பலவகை நோய்களுக்கும் இப்பொது மருந்தை உபயோகித்துப் பயனடையலாம்.

### 67. (3) அடைப்பான் வெக்கைக் கோல்லி வயிறு உப்பல், விஷம் தீண்டுதல் முதலிய பலவியாதிகளுக்கும் வைத்தியம்.

**ஔஷதம்:**—சிவனார் கிழங்கு மூன்று விராகனெடை, மிளகு மூன்று விராகனெடை நாவி விராகனெடை ஒன்று இவற்றை வாங்கி வைத்துக்கொள்ளவேண்டும். நாவியிற் பாதியைத் தில்லம்பாலிலே யரைத்து, மூன்றுநாட்கள் வரையில் அந்தப்பாலிலேயே ஊறவைத்தெடுத்துக்கொண்டு, அந்தப்பாலிலேயே அவற்றை அரைத்து, மிளகு பிரமாணம் உண்டைசெய்து வைத்துக்கொண்டால் சகல வியாதிகளுக்கும் உதவும். அதில் ஒரு உண்டை எடுத்து, வியாதிக்குத் தக்கபடி, அந்த உண்டையை மாட்டின் அடிநாக்கில் தேய்க்கவும்.

மருந்து தேய்த்தவுடன், அம்மான்பச்சரிசியிலை காரையிலை முதலிய இலைகளை அளவாய் எடுத்துக்கொண்டு வந்து, பசும்பாலிலே அரைத்து, இரண்டுபடி பாலில் அதைக் கரைத்து மாட்டுக்கு உள்ளுக்குக் கொடுக்கவும். இந்த மருந்து கொடுத்தபொழுது மாட்டை வெளியில் விடாமலும், இன்னும் மாட்டுக்குத் தண்ணீர் காட்டாமலு மிருக்கவும்; மருந்து கொடுத்த மறுநாள் பச்சையரிசியைக் கொணர்ந்து பச்சைப்பயிறு கலந்து கஞ்சி காய்ச்சி மாட்டுக்குக் குடிப்பிக்கவும்.

மேற்கூறிய இலை அகப்படாமற்போனால் சிற்றாமணக்கு இலையுடனும் வசம்பு விராகனெடை 1., கருஞ்சீரகம் பலம் கால் இவைகளை முன்சொன்ன இலைகளுடன் கூட்டி அரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். சகல நோய்களும் தீரும்.

### 68. (1) வெக்கைக்கு வைத்தியம். (பொது ஔஷதம்.)

**நோயின்தன்மை:**—பொதுவாய் வெக்கைகள் எட்டுவகைப்படும். எல்லா வெக்கைகளின் விவரங்களைப்பற்றியும், ஆங்காங்கு கூறியிருக்கிறோம். பொதுவான ஒரு ஔஷதத்தைப்பின் சொல்லுகிறோம். இதனைச் சகல வெக்கைகளுக்கும் உபயோகித்துப் பயன் பெறலாம்.



**ஔஷதம்:**—ஆலம்விழுது, அத்தி நுனிக்கொழுந்து, மாமரப்பட்டை, முள்ளிலவம் பட்டை, ஒதியன்கொழுந்து, களிப்பாக்கு, காசுக்கட்டி இவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொருபலம் எடுத்து, விழுதுபட்டைகள் முதலியவற்றை இடித்தும் கடைச்சரக்குகளைப் பொடிசெய்தும் எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்து, இரண்டுபடி எருமைத் தயிரில் கலந்து சகல வெக்கை வியாதிகளுக்கும் மருந்தாக உள்ளுக்குக் கொடுக்கவும் நோய்தீரும். இந்தமருந்துகளை இரண்டுபடி பசும்பாலிலும் கலந்து மாடுகளுக்கு உள்ளுக்கு கொடுக்கலாம்.

### 69. (2) வெக்கைக்கு வைத்தியம். (மற்றொரு பொதுமருந்து.)

**ஔஷதம்:**—வெள்ளைப்பூலா இலை, வெதுப்படக்கி ஆரைச்செடியின் கொழுந்து, சீந்திற்றண்டு, வல்லாரையிலை இவ்வைந்து மூலிகைகளையும் வகைக்கு ஒருபலம் எடுத்தரைத்துக் கால்படி எள்ளும் கூடச் சேர்த்து அரைத்து ஒருபடி பசும்பாலில் சகல வெக்கைகளுக்கும் உள்ளுக்குக்கொடுக்கக் குணமுண்டாகும்.

### 70. (1) மாட்டின் சகலவியாதிகளுக்கும் வைத்தியம்.

**நோயின் தன்மை:**—மாடுகளுக்குப் பொதுவாய் எந்த வியாதி பீடித்திருந்தாலும் பொதுவாய் பின்வரும் மருந்தைச் செய்து உபயோகித்துப் பயன்பெறலாம் என்பது அநுபவமுறையிற் கண்டது.

**ஔஷதம்:**—எருக்கன்கிழங்கின் இலையை அரைத்து இரண்டு பாக்களவு அல்லது மூன்று பாக்களவு எடுத்துக்கொண்டு வியாதிக்குத் தக்கதாகப் பார்த்து ஆமணக்கு இலையுடனே சேர்த்துக்கொடுக்கவும்.

### 71. (2) சகல வியாதிகளுக்கும் வைத்தியம். (பொது மருந்து)

**ஔஷதம்:**—பன்றிநெய், காயம், காட்டுக் கருணைக் கிழங்கு, துரிசு, வெள்ளைப்பூண்டு இந்த ஐந்து சரக்குகளையும் அளவாய்ச்சேர்த்து அரைத்துக்கொண்டு சகலவித வியாதிகளுக்காகுமென்று மாட்டின் உள்ளுக்குக் கொடுக்கவும்.

**நாசிகைமருந்து:**—தும்பை, துளசி, வட்டக் கிலுகிலுப்பை, குப்பைமேனி, சிறுபுள்ளடி, கருமுள்ளிப்பழம் முதலிய பூண்டுகளைச் சேர்த்து மாட்டுக்கு நசியமருந்து செய்துபயோகிக்கவும்.

### 72. பால்குறுகின மாட்டுக்கு வைத்தியம்.

**நோயின் தன்மை:**—பலவித காரணங்களால் பசுமாடுகள் திடீரென்று கறவை மட்டுப்படும். அதற்குப் பலகாரணங்கள் கூறுவார்கள், பிற்கூறிய மருந்து உபயோகப்படுத்தப்படின் பலன் தருமென்பது தேர்ந்த நிபுணர்களின் அநுபவம்.

**ஔஷதம்:**—சித்திரை நக்ஷத்திரம் கேட்டு வந்து, காட்டெருக்குவாழைப்புல்லுருவி கொண்டுவந்து பசுவின்பாலில் அரைத்துப் போடப் பாலுண்டாகும்.

### 73. எருமை மாட்டுக்கு மருந்து.

எருமை நோய்ப்பட்டால் கடப்பங்கொட்டையை இரண்டு அரைத்துக் காடியிற் கலந்து உள்ளுக்குக் கொடுக்கவும், நோய் நீங்கிக் குணமுண்டாகும்

### 74. உறுப்புப் போடாத மாட்டிற்கு மருந்து.

**வியாதியின் தன்மை:**—மாடுகள் பிரஸவித்தபிறகு, உறுப்புகள் யதேச்சையாய் விழுவது நாம் பார்த்திருக்கிறோம். சில வேளைகளில் சில தேக அசௌகரியங்களினால் மாடுகளின் உறுப்பு, இரண்டு மூன்று நாட்கள் வரையில் விழாமல் இருக்கின்றன. இப்படியே நெடுநாட்கள் தங்குமாகில் மாட்டிற்குச் சிரமம் அதிகரித்து, அது பின்னும் பலவகைப்பட்ட நோய்வாய்ப்பட்டு வருந்தக்கூடிய நிலையில் வந்துசேரும். ஆகவே, அந்த உறுப்பை மாட்டின் வயிற்றினின்று இலகுவாய் விழச் செய்ய, மாட்டுக்குடையவர் உடனே மருந்து செய்யவேண்டும்.

**ஔஷதம்:**—களி முசுக்கட்டைத் தழையைப் பறித்து, ஓரளவாய்க் கொண்டு வரவேண்டும். அதை இரவில் பானையில் இரண்டு படி நீரைவைத்து, அதில்போட்டு நன்றாய்க் கொதிக்க வைத்து இரவுமுழுவதும் அப்படியே வைத்திருக்கவேண்டும். காலையில் எழுந்து ஜலத்திலுள்ள இலையை நன்றாய்க் கசக்கிப் பிழிந்தெறிந்துவிட்டு, அதில் அளவாய் எருமுட்டைச் சாம்பலைக் கலக்கி, இந்த மருந்தை மூன்றுவேளை மாட்டுக்கு உள்ளுக்குக் கொடுக்கவும். நாலைந்து நாட்கள் சென்றவளவில்,

இந்தமருந்தை யுட்கொண்டமாடு உறுப்பை நழுவவிட்டுச் சுகமடையும்.

### 75. அதிக காலம் உறுப்புப்போடாத மாட்டிற்கு.

**வியாதியின் தன்மை:**—பசுக்கள் கன்றீன்றவுடன் உறுப்புகள் உடனே விழாமல், இரண்டு மூன்று மாசங்கள் வரையிலுங் கூடத் தங்கிவிடுவதுண்டு. அப்படி உறுப்பு நெடுங் காலந் தங்கி அழுகிப்போய் மாட்டுக்கு மிக்க நோயை விளைவிப்பதுண்டு. மாட்டுக்காரர் இந்த விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டியது அவசியம். இந்த உறுப்பு பசுவின் தேகத்திலேயே கிடந்து அழிந்து ஒருவித நிராணிவியாதியை யுண்டாக்குவதுடன், மாட்டின்கிட்டே எவரும் போக விடாமல், ஒரு வித துர்க்கந்தத்தை வீசும். ஆகவே மாட்டுக்குச் சொந்தக்காரன், இந்த வியாதியை முன்னடியே வரவொட்டாமல் முன் ஜாக்கிரதையுடனிருத்தல் கிரமமானது.

**ஔஷதம்:** — முடைப்பூண்டு (மணத்தக்காளிபோன்று இலையுடையதாய், மிளகு போன்ற காயையும் முள்ளையுமுடையதாயிருக்கும் ஓர் செடியாகும்) ஓரளவாய்க் கொண்டுவந்து, அதை நன்றாய் உரலிலிட்டு இடித்துக்கொள்ள வேண்டும். கருஞ்சீரகம் பலம் ஒன்று, கண்டத்திப்பிலி அரிசித்திப்பிலி, கிராம்பு, ஜாதிக்காய் முதலிய கடைச் சரக்குகளை வகைக்கு ஒரு பலம் வாங்கிவந்து, இவற்றையெல்லாம் சேர்த்து சன்னமாய்ப் பொடிசெய்து மூன்று மூங்கிற் குழாயளவு மேற்கூறிய முடைப்பூண்டு சாறெடுத்து, அதில் இம்மருந்துச் சரக்குகளைக் கலக்கி மாட்டுக்கு உள்ளுக்கு மூன்றுவேளை கொடுக்கவேண்டும் (மூங்கிற் குழாய் ஒன்று ஒரு சேர் அளவுடையது) இம்மாதிரி மூன்றுவேளை கொடுக்கப் பசுமாட்டின் தொங்கின உறுப்பு ஏழு அல்லது 8 நாட்களில் அடியுடன் விழுந்து மாடு சௌக்கியத்தை யடையும். இந்த மருந்தில் மாடு குணமடையாதுபோனால், மாட்டின் அடிவயிற்றிலிருந்து விலாவில், இரண்டு சூடுபோடக் குணமடையும்.

---

## சில சாதாரண இந்திய பக்ஷிகள்.

இந்திய விவசாயப் பத்திரிகை என்ற (The Agricultural Journal of India) தொரு பத்திரிகையில், சில சாதாரண பக்ஷிகளைத் தலைக்குறியிட்டு, அபூர்வமான குறிப்புகள் பக்ஷிகளைப்பற்றி வெளிப்படுகின்றன. அதில் நன்றாக வர்ணமிட்ட அழகிய பக்ஷிகளின் படங்கள் காணப்படுகின்றன. ஆனால் அப்பட்சிகளுக்கு இந்தியாவில் இந்தியவாசிகள் சில பேர்கள் வைத்தழைப்பது சகஜமாயிருந்தும் அப்பட்சிகளுக்கு அவ்விந்தியப்பெயர்கள் மட்டும் குறிப்பிடாமல் போனது வருத்தப்படத்தக்கது. இப்பத்திரிகை 'இந்தியா பத்திரிகைஎன்ற பெயர் புனைந்தும் இந்தியர்களுக்கு ஏற்றமாதிரி அப்பட்சிகளுக்குப் பெயர்கொடுத்து பத்திரிகை நடத்தாதது விரும்பத்தக்கதன்று. இன்னும் இந்தியப் பணம் இப்பத்திரிகை நடத்துவதில் செலவழித்து வளர்க்கப்பட்டும்' இப்பத்திரிகையின் நடத்தை விரும்பத்தக்கதாயில்லை.

---

## பாம்பையும் தின்றார்களாம்.

பாம்பையும் தின்றார்களாம் என்பதில் அதிசயம் ஒன்று இருப்பதாக ஒருவரும் சொல்லமாட்டார்கள். பாம்பை யார் தின்றார்கள்? ஆபிரிக்காவிலுள்ள சில காங்கோவாசிகள். தின்றாலென்ன? வேறொருவரும் தின்பதில்லையா? இந்தியாவில் பிடாரர்கள் தின்கிறார்கள். நச்சுப்பையை நீக்கிப் பாம்பைப் பிடாரர்கள் கடைசியாய் பக்ஷித்துவிடுவது ஏற்கனவே வழக்கமாயிருப்பதனால், இதனால் அதிசயமொன்றில்லை என்று தெளியவேண்டுவதுதான். ஆனால் மாமிசமுண்ணும் ஜனங்கள் எந்த மாமிசத்தையும் உண்பது' என்ற ஜீவகாருணியமில்லாத மூடங்கள் எதனையும் தின்னுவார்கள்.

காங்கோ என்னு மலைப்பிரதேசத்திலுள்ள சில அநாகரீகமான அத்தேசவாசிகள், பித்தியன் (Python) என்ற பாம்பொன்று பன்றியொன்றைப் பிடித்துத் தான் விழுங்கக்கூடிய பாகத்திற்கு அதிகமாய் விழுங்கித் தத்தளிக்கும்போது, அம்மலைப்பாம்பினைத் துரத்தியோடினார்களாம். அம்மலைப்பாம்பு அதை விழுங்கிச் சமாளிக்க முடியாதபடி பெரியதாயிருந்தபடியால் மிகவும் அது தத்தளித்துக் கொண்டிருந்ததாம். அந்தப்பாம்பின் தொண்டையி லகப்பட்டுக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த இந்தப்பன்றியை இக்காங்கோ மலைவாசிகள் விடுவித்தார்களாம். அப்பன்றியை இவர்கள் ஜீவகாருணியத்துடன் ஐயோ பாவம் என்றுசொல்லி விடுத்தார்களா? ஓ! பாம்பே நீ இவ்வளவு பெரிய பன்றியை விழுங்கிவிடுவதா! இது உன்னால் முடியாத காரியமல்லவா? உன்னையும் அப்பன்றியையும் சேர்த்து நாங்கள் விழுங்க வந்திருக்கிறோம்' என்று சொல்வதுபோல், அவர்கள் அப்பன்றியைப் பாம்பின்வாயினின்று எடுத்து அடித்துப் பக்குவப்படுத்தி உண்டதுடன் நில்லாது, பன்றியை விழுங்கவந்த பாம்பையும் அடித்துக்கொன்று பக்குவப்படுத்தி வாயில் போட்டுக்கொண்டார்களாம். இம்மாதிரி செய்த படமொன்று 1921-ஆம் வருஷத்து ஜனவரிமாதத்து மாடர்ன் ரிவியூ சஞ்சிகையில் காணப்படுகின்றது.



## வர்த்தமானக் குறிப்புகள்.

1. **திமிங்கில பூஜை:**—திமிங்கிலம் உத்தர துருவத்திலுள்ள ஆர்க்டிக் சமுத்திரத்தில் பெரும்பாலும் காணப்படும். இதை இதன் கொழுப்புக்கென்றும், எண்ணெய்க்கென்றும், முள்களுக்கென்றும் இவற்றைக் கூட்டம் கூட்டமான கப்பல்களோடுபோய் வேட்டையாடுகிறார்கள். இப்படிப்பட்ட திமிங்கிலம் ஒன்று தட்டுத்தடுமாறி, பம்பாய்க்கு அருகிலுள்ள கடற்கரையில் காணப்பட்டது. ஆயிரக்கணக்கான பேர் அதைப் போய்ப் பார்த்து வருகின்றனர். செம்படவர்கள் அதற்குப் பூஜை செய்கின்றனர். அதோடு மிட்டாய் முதலியவைகளையும் அதற்குக் கொடுக்கின்றனர். இத் திமிங்கிலத்தைக் கவர்ன்மென்டார் பம்பாய் இயற்கைசாஸ்திர சங்கத்திற்குப் பரிசாக அளித்துவிட்டனர்.

---

2. **புருக்களைக் கொன்றதால் நேர்ந்த குழப்பம் அடங்கி வருகின்றது:**—பம்பாய், ஜனவரி 25—ஐரோப்பிய சிறுவரிருவர் புருக்களைக் கொன்றுவிட்டதால் ஏற்பட்ட குழப்பம், கமிஷனர் கேஸை வாபீஸ் வாங்கிக்கொண்டதன் பயனாக அடங்கிவிட்டது. போலீஸார் நடந்துகொண்ட விதம் ஆக்ஷேபிக்கத் தக்கதென வியாபாரிகள் கமிஷனரைப் பேட்டிகண்டு அறிவித்தனர். கமிஷனர் அதை விசாரிப்பதாகவும் இனி பொது ரஸ்தாக்களிலுள்ள பறவைகளைக் கொல்லக்கூடாதென உத்தரவு பிறப்பிப்பதாகவும் கூறினார்.

---

3. **ஐக்கிய மாகாண சட்ட சபை ஆயுர்வேத யூனானி வைத்தியம்:** — லக்நௌ, மார்ச்சு 2 —இன்றைய சட்ட சபைக் கூட்டத்தில், கால் நடைகளும் பால்விலையும். கால் நடைகளின் சங்கியை குறைந்து, பால் விலை ஏறியிருப்பதை முன்னிட்டு ஒரு கமிட்டி நியமித்து விசாரிக்கச் சொல்ல வேண்டுமென்று மிஸ்டர் ஸிங்கு ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். கனம் சிந்தாமணி அதற்குப் பதிலளிக்கையில், தீர்மானத்தில் கவர்னருக்கு அனுதாபமுண்டென்றும், விவசாய அபிவிருத்தி சபையில் ஏற்கெனவே சில ஐரோப்பியரும் இந்தியரும் இருந்து வருவதாயும், ஜனப் பிரதிநிதிகளுக்கு அதில் ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், தீர்மானத்தில் குறிப்பிடப்பட் டிருக்கும் வேலையை அவர்களே மேற்போட்டுக்கொள்ளும்படி செய்துவிடலாமென்றும் சொன்னார். அதன்மேல் தீர்மானம் வாப்ஸ் வாங்கிக் கொள்ளப்பட்டது. 4-ந்தேதி மீண்டும் சபை கூடும்.

---

4. **சென்னை மிருகவைத்தியர்கள்:** — சென்னைக் கவர்ன்மென்டு மிருக வைத்திய இலாகாவைச்சேர்ந்த ஸர்ஜன்கள் சென்ற வருஷம் தங்கள் குறைகளை நிவர்த்தித்துக் கொடுக்க வேண்டுமாகச் சென்னை கவர்னருக்கு ஒரு மகஜரை அனுப்பியிருந்தார்கள். அதற்கு நாளது தேதி வரையில் யாதொரு பரிகாரமும் ஏற்படுத்திக் கொடுக்கப்படாததால், இவர்கள் மறுபடியும், தங்கள் பற்பல குறைகளை விளக்கி, ஒரு மகஜரைக் கவர்னருக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

---

5. **போலி காளைகள்:**—சென்னையில் பால் பசுக்களை யபிவிருத்தி செய்வதற்காக, அயர்ஷையர் எருதுகள் வேப்பேரி மிருக வைத்திய சாலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும், வேண்டியவர்கள் கிரமமான கட்டணத்தைச் செலுத்தி அதை உபயோகப்படுத்திக்கொள்ளலாமென்றும் விளம்பர ஸபையார் அறிவிக்கிறார்கள்.

---

6. **ஜீவஹிம்சை நிவாரணச் சங்கம்:**—சிவகங்கை, சுண்டி, சாத்தூர் ஊர்க்காடு ஜமீன்தார்களிடமிருந்தும், ஆரணி ஜாகிர்தாரிடமிருந்தும், ஊத்து மலை ஜமீன்தாராணியிடமிருந்தும் ரூ. 1,435 நன்கொடை கிடைத்திருப்பதாகக் காரியதரிசி அறிவிக்கிறார்.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras —B. 16[illegible]96

197916

# Convictions for the Year 1921.

This return is published to inform the public of the nature and extent of acts of cruelty to animals discovered by the Society in the City of Madras.

The following **CONVICTIONS** for cruelty to animals were obtained in Madras during the first three months of the year 1921 by the Society's Agency:—

| | | |
|---|---|---|
| 1. | Working Horses in an unfit state ... ... ... | 95 |
| 2. | Do. Ponies do. ... ... ... ... | 364 |
| 3. | Do. Bullocks do. ... ... ... ... | 1,056 |
| 4. | Do. Buffaloes do. ... ... ... ... | 2 |
| 5. | Do. Mules do. ... ... ... ... | ... |
| 6. | Cows ill-treated ... ... ... ... ... | ... |
| 7. | Calves do. ... ... ... ... ... ... | 24 |
| 8. | Fowls do. ... ... ... ... ... ... | ... |
| 9. | Donkeys do. ... ... ... ... ... | 1 |
| 10 | Goading Bulls ... ... ... ... ... ... | ... |
| 11 | Overloading ... ... ... ... ... ... | ... |
| 12. | Owners causing cruelty ... ... ... ... | 31 |
| | Total ... | 1,573 |

## 1921-௵ முதல் மூன்று மாசங்களில் ஜீவ ஹிம்ஸைக்காகச் செய்த தண்டனைகள் பட்டி.

அடியில் குறித்த ஜீவ ஹிம்ஸையான குற்றங்கள் 1921-௵ முதல் மூன்று மாசங்களில் இந்தச் சங்கத்தாரால் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டன:—

| | | |
|---|---|---|
| 1. | உழைக்கச் சக்தியில்லாமல் நோயாளியாயிருந்த குதிரைகளை வருத்தி வேலை வாங்கினதற்காகத் தண்டித்த குற்றம் .... .... .... | 95 |
| 2. | ,, குதிரைமட்டங்களை ,, .... | 364 |
| 3. | ,, எருதுகளை ,, .... | 1,056 |
| 4. | ,, எருமைக் கிடாக்களை ,, .... | 2 |
| 5. | ,, கோவேறு கழுதையை ,, .... | .... |
| 6. | பசுக்களைத் துன்பப்படுத்திய குற்றம் .... .... .... .... | .... |
| 7. | கன்றுக் குட்டிகளைத் துன்பப்படுத்திய குற்றம் .... .... .... | 24 |
| 8. | கோழிகளை ,, .... .... .... .... | .... |
| 9. | கழுதைகளை ,, .... .... .... .... | 1 |
| 10. | எருதுகளை தாற்றுக்கோலால் தூண்டினது .... .... .... | .... |
| 11. | அதிக பாரத்தை ஏற்றியது .... .... .... .... | .... |
| 11. | சொந்தக்காரர்களே செய்த மேற்குறித்த குற்றங்கள் .... .... | 31 |
| | மொத்தம் .... | 1,573 |

**இந்தச் சங்கத்தின் காரியங்கள் அவரவர்கள் இஷ்டப்பட்டுக் கொடுக்கும் உபகாரப் பொருளாலேயே நடத்தப்படுகின்றன.**

**The Society is supported only by Voluntary Contributions.**